**<u>நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.எண்.59/2020</u>**

**அ.சா.2 நித்யா க/பெ. நாராயணன், பூசாரிவட்டம் நாட்றம்பள்ளி சாட்சியை மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=**

எதிரி என்னுடைய கணவரின் அண்ணன் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று எங்கள் வீட்டில் என்ன நிகழ்ச்சி நடந்தது என்றால் என்னுடைய மாமனாருக்கு திவசம். எதிரி எப்போது என் மாட்டை பிடித்து சென்றார் என்றால் மதியம் 02.30 மணியளவில் பிடித்து சென்றார். திவசம் முடிந்து என்னுடைய அம்மாவும் தங்கையும் கிளம்பிவிட்டார்கள் என்றால் அப்போது தான் பிரச்சனை ஏற்பட்டது. என்னிடமிருந்து மாட்டை பிடித்து செல்லும் போது எதிரி கையில் எந்த ஆயுதமும் வைத்திருக்க வில்லை என்றால் சரிதான். என் அம்மாவை தாக்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. முதலில் எதிரி மாட்டை என் கையிலிருந்து பிடுங்கிய போது என் தங்கை விலக்கிவிட்டார், அதனால் என் அம்மா வந்ததால் என் அம்மாவை அடித்துவிட்டார், பின்னர் அதன் தொடர்ச்சியாக வீட்டிலிருந்த கத்தியை கொண்டு வந்து என் அம்மாவின் தலை மீது வெட்டிவிட்டார். நான் தற்போது கூறிய சங்கதியை தான் போலீசாரிடம் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் ஏற்கெனவே இருந்த முன் விரோதத்தை பயன்படுத்தி, புகாரிலும், போலீசார் விசாரணையிலும், முதன்மை விசாரணையில் முரண்பட்டு சாட்சியமளிக்கிறன் என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரியை அடித்துவிட்டு அதிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரியின் மீது பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் புகார் கொடுத்துவிட்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா மாடு பிடித்து வரப்பில் வரும்போது கால் தவறி விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை எதிரி தாக்கவில்லை என்று எனது அம்மா வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. எதிரிக்கும் எனக்கும் ஏற்கெனவே இருந்த முன் விரோதத்தை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யாக வழக்கு கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை=**

இல்லை

<u>நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி.எண்.59/2020</u>

**அ.சா.1 சத்யா க/பெ. நடராஜன், பூசாரிவட்டம் நாட்றம்பள்ளி சாட்சியை மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=**

எதிரி என்னுடைய மருமகன் முறை என்றால் சரிதான். எதிரி என் மகள் வீட்டின் மாட்டை பிடித்து சென்றுவிட்டார் என்று தான் எதிரிக்கும் என் மகளுக்கும் பிரச்சனை என்றால் சரிதான். எதிரிக்கு குடிபழக்கம் உண்டு என்றால் சரிதான். எதிரிக்கும் என்னுடைய மகளின் கணவருக்கும் அடிக்கடி வாய்தகராறு ஏற்படும் என்றால் சரிதான். மேற்படி சம்பவ தினத்தன்றும் எதிரி மது அருந்தி இருந்தார் என்றால் சரிதான். தற்போது நானும் என் மகளும் எதிரி ஆகியோர் ஒரே இடத்தில் தான் பக்கத்து பக்கத்து வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். எதிரி தான் குடித்து விட்டு பேசியிருந்தார் என்று சொல்லி கொண்டு என்மகள் நித்யாவும் நானும் சென்று எதிரியை அடித்துவிட்டோம் என்றால் இல்லை. என் மகளுக்கும் எதிரிக்கும் ஏற்கெனவே இருந்த முன் விரோத காரணமாக நடக்காத சம்பவத்தை நான் நடந்ததாக பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தாக்கியதாக கூறப்படும் கத்தி என் மகள் வீட்டில் இருந்தது தான் என்றால் சரியல்ல. எதிரியே மது அருந்தி இருந்ததால் அவரால் நிற்க முடியாமல் விழுந்து கிடந்தார் என்றாலும் நாங்கள் அவரை அடித்துவிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையிலிருந்த போது அடிப்பட்ட அன்றே போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்த பிறகு மீண்டும் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.1 புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை போட்ட போது தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சொல்வது போல் மருத்துவமனையில் போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களின் படி மறுநாள் தான்போலீசார் விசாரித்ததாக உள்ளது என்றால் சரியல்ல. நான் புகாரிலுள்ள சங்கதிகளின் படி தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் மற்றவை எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய போலீஸ் விசாரணையில் எதிரி என் மகளை அடித்துவிட்டதாக மிகைப்படுத்தி புகார் அளித்திருந்ததாக கூறியிருந்தேன் என்றால் அப்படி சொல்லவில்லை. நான் சொல்லாத சங்கதியை போலீசார் எழுதி கொண்டார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு சொல்ல தெரியவில்லை. எதிரியை நானும் என் மகளும் தாக்க ஓடிய போது, நானே தவறி கீழே விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்திற்கு எதிரி தான் காரணம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான கத்தியை எனது இளையமகள் எங்கள் வீட்டிலிருந்து தான் எடுத்து வந்து கொடுத்தார் என்றால் இல்லை

**மறுவிசாரணை=**

இல்லை